உ

சிவமயம்

# அகில இலங்கை

# சைவ ஆலய தர்மகர்த்தாக்கள் சபை

# ALL CEYLON SAIVA TEMPLE MANAGER'S UNION

## அமைப்புத் திட்ட விதிகள்

1. பெயர் :

இச் சபையின் பெயர் "அகில இலங்கை சைவ ஆலய தர்ம கர்த்தாக்கள் சபை" என்பதாம்.

2. காரியாலயம் :

தர்மகர்த்தாக்கள் சபையின் காரியாலயம் அச் சபையின் நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட இடத்தில் இருத்தல் வேண்டும்.

3. நோக்கங்கள் :

(அ) சைவ ஆலயங்களில், சிவாகம விதிப்படி நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், பூஜைகள், உற்சவங்கள், செவ்வனே நடைபெற வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தல்; ஆதரவு கொடுத்தல்; அவற்றிற்கு வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள் செய்தல்.

(ஆ) சிவாலயங்களில் வழிபாட்டு முறைகள், சிவாகம விதிப்படி நடைபெறச் செய்தல்; அவற்றிற்குப் புறச்சமயிகளாலோ, ஆகம விரோதிகளாலோ, நாஸ்திகர்களாலோ அல்லது எவ்வகுப்பினராலும், எவ்வித பங்கமும் ஏற்படாது பாதுகாத்தல், பேணல் முதலிய எந்தச் செயலையுஞ் செய்தல், செய்வித்தல்.

(இ) ஆலயங்களிற் கடமையாற்றும் அர்ச்சகர்களோ மற்றும் பணியாளர்களோ வேதாகம, சிவாகம விதிகளை அனுசரித்து ஒழுகுபவர்களாயும், சைவ ஆசார சீலர்களாயும் இருத்தல் வேண்டும் என்பவற்றை நடைமுறையிற் கொண்டுவருதல்.

(ஈ) சைவ ஆலயங்களிற் சைவ மக்கள், சிவாகம விதிப்படி வழிபட்டு இறைவன் அருள் பெற்று உய்யும்வண்ணம் வேறு வேண்டிய நடவடிக்கை எடுத்தல், செய்வித்தல்.

4. (அ) வேத சிவாகம விதிகளுக்கு மாறுபாடு இல்லாத முறையிற் பரிபாலித்து வரும் ஆலய தர்மகர்த்தாக்களே இச் சபையில் அங்கத்துவம் வகிக்க உரிமையுடையவராவர்.

(ஆ) தர்மகர்த்தாக்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆலயங்களில் தர்மகர்த்தாக்கள், அக் கோவிலின் நிர்வாகத்தினரால் தெரிவு செய்யப்

பட்ட அங்கத்தவராய், இரண்டு பேருக்கு மேற்படாத தொகையின ராய் ஒவ்வொரு ஆலயத்திற்கும் பிரதிநிதிகளாக அங்கத்துவம் பெற லாம்.

(இ) தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்துவம் மேற்குறிக்கப்பட்ட உப விதிகளின்கீழ் தகுதியுடையோரில் மாதாமாதம் ரூபா 1/- அல்லது வருடம் ஒன்றிற்கு ரூபா 10/-க்குக் குறையாத அங்கத்துவப் பணத் தைக் கொடுப்பவரே அங்கத்தவராக உரிமையுண்டு.

5. அங்கத்தவர் வகை :

தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்தவர் மூவகைப்படுவர்.

அவையாவன :

(அ) கௌரவ அங்கத்தவர்.

(ஆ) சிவிய அங்கத்தவர்.

(இ) சாதாரண அங்கத்தவர்.

6. அங்கத்தவர் இலக்கணம் :

(அ) சமய தீட்சை பெற்றுச் சைவாசாரத்துடன் ஒழுகிச் சைவசமய வளர்ச் சிக்கும், முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் சிறந்த தொண்டாற்றுஞ் சைவப் பெருமக்களுள்ளே தர்மகர்த்தாக்கள் சபையினால் வருடாந் தக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டவர்களே கௌரவ அங்கத்தவராவார்.

(ஆ) தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்துவம் பெறத் தகுதியுடையோரில் சபைக்கு அங்கத்துவப் பணமாக ஒரு வருடத்திற்குள் ரூபா நூற் றிற்குக் குறைவுபடாத பணத்தைக் கொடுப்பவரே சிவிய அங்கத்தவ ராவார்.

(இ) தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்துவம் பெறத் தகுதியுடையோரில் மாதமொன்றிற்கு ரூபா ஒன்று அல்லது வருடமொன்றிற்கு ரூபா பத் துக்குக் குறையாத அங்கத்துவப் பணத்தைக் கொடுப்பவரே சாதா ரண அங்கத்தவராவார்.

7. நிர்வாகசபை :

(அ) தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்தவர்களுள் வருடாந்தக் கூட்டத் தில் பாதுகாப்புச் சபையால் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிந் தெடுக்கப்பட்டவர்களே நிர்வாகசபை அங்கத்தவர்களாவார். இந் நிர்வாகசபை 25 சாதாரண அங்கத்தவர்கள் கொண்ட சபையே நிர்வாக சபையாகும். இவர்கள் சமயதீட்சை பெற்றவர்களாகவே இருத்தல் வேண்டும்.

(ஆ) இந் நிர்வாகசபையில் அங்கத்தவரின் இடம் ஏதேனுங் காலியானால், அந்த இடத்திற்கு ஒருவரை நியமிக்கும் பொறுப்பும் கடமையும் நிர்வாக சபைக்கே உரியதாகும்.

8. உத்தியோகத்தர்களும் நியமனமும் :

நிர்வாகசபை நியமிக்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் அச்சபை தம்முள் பின்வரும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்:

(அ) தலைவர்.

(ஆ) ஐந்து உப தலைவர்கள்.

(இ) இரண்டு காரியதரிசிகள்.

(ஈ) தனாதிகாரி.

(உ) உதவித் தனாதிகாரி.

9. கணக்குப் பரிசோதகர் :

தர்மகர்த்தாக்கள் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்களி லொருவரைச் சபையின் கணக்குப் பரிசோதகராக நியமித்தல் வேண்டும். தர்மகர்த்தாக்கள் சபையின் வரவு செலவுக் கணக்குகளைப் பரி சோதிப்பதே இவரின் கடமையாகும்.

10. நிர்வாகசபையின் பொறுப்பும் கடமையும் :

தர்மகர்த்தாக்கள் சபையின் செயற்கூட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்தல், மூன்றும் விதியிற் கூறப்பட்ட நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு வேண்டிய எக்காரியத்தையுஞ் செய்தல், பொருள் சேர்த்தல், செலவு செய்தல், பரிபாலித்தல் முதலிய யாவும் நிர்வாக சபையின் பொறுப்பும் கடமையுமாகும்.

11. கூட்டங்களில் தலைமை வகித்தல் :

தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டங்களிலும், நிர்வாகசபைக் கூட்டங் களிலும் எட்டாம் விதியின்கீழ், தெரிவு செய்யப்பட்ட தலைவரே தலைமை வகிக்க வேண்டும். அவரில்லாதவிடத்து உபதலைவர்களில் ஒருவரைத் தலைமை வகிப்பதற்குச் சபை தெரிவு செய்யவேண்டும். இவர்கள் இல்லாதபோது கூட்டத்திலுள்ள ஒரு அங்கத்தவரைத் தற்காலிகத் தலைவராகத் தெரிவு செய்தல் வேண்டும்.

12. கூட்டங்களுக்குக் குறைந்த எண்

(அ) தர்மகர்த்தா சபைக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களுள் மூன்றி லொரு ($\frac{1}{3}$) பேர்களுக்குக் குறைவுபடாத அங்கத்தவர்கள் சமுகமா யிருத்தல் வேண்டும்.

(ஆ) நிர்வாகசபைக் கூட்டத்திற் பதினொரு (11) அங்கத்தவர்கட்குக் குறை யாமற் சமுகமாய் இருத்தல் வேண்டும்.

13. ஆண்டுக் கூட்டம் :

(அ) சித்திரை மாதம் 30-ம் திகதி முடியமுன்னர் வருடாந்தக் கூட்டம் ஆண்டுதோறும் நடைபெறல் வேண்டும். இதற்கு வேண்டிய ஒழுங் குகளைச் செய்வது நிர்வாகசபையின் பொறுப்பும் கடமையுமாகும்.

(ஆ) வருடாந்தக் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட தினம் எல்லா அங்கத்தவர்கட்கும் பதினைந்து (15) நாட்களுக்கு முன் அறிவிக்கப்படல் வேண்டும்.

(இ) அங்கத்தவர்கள் வருடாந்தக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகளை மேற்கூறிய அறிவித்தல் செய்யப்பட்ட ஏழு (7) நாட்களுக்குள் செயலாளருக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

14. விசேட பொதுக் கூட்டம்:

(அ) வேண்டிய காலங்களில் தர்மகர்த்தாக்கள் சபையின் விசேட பொதுக் கூட்டங்களைக் கூட்டும் அதிகாரம் தலைவருக்கும், நிர்வாக சபைக்கும் உண்டு.

(ஆ) தர்மகர்த்தாக்கள் சபையின் அங்கத்தவர்களின் தொகையில் நாலில் ஒரு ($\frac{1}{4}$) பங்கிற்குக் குறையாத தொகையினர் பாதுகாப்புச் சபையின் விடயங்கள் யாதேனும் சபையின் கவனத்திற்கு எடுக்கும் பொருட்டு ஒரு விசேட பொதுக் கூட்டம் கூடவேண்டுமென எழுத்துமூலம் கேட்டுக்கொண்டால், கேட்ட பதினைந்து (15) நாட்களுக்குள்ளாக ஒரு விசேட பொதுக்கூட்டம் கூட்டும் பொறுப்பு நிர்வாக சபையினதாகும்.

15. அங்கத்துவம் நீக்கல்:

(அ) தர்மகர்த்தாக்கள் சபையின் நோக்கங்களிற்கும், கௌரவத்திற்கும் முரணாக நடக்கும் எவரையும் சபையிலிருந்து நீக்கிவிடலாம் இதை ஒரு விசேட பொதுக் கூட்டத்திற் சமுகமளித்தவருள் மூன்றில் இரண்டு ($\frac{2}{3}$) பங்கிற்குக் குறையாதவர்கள் அநுமதித்தல் வேண்டும்.

(ஆ) அங்கத்துவ உரிமையைப் பெறுவதற்கு ஆரும் விதியிற் கூறிய அங்கத்துவப் பணத்தை வருடந்தோறும் கொடுப்பவர்கள் பங்குனி மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாகக் கொடுக்கத் தவறினாலும், மாதந்தோறும் கொடுப்பவர்கள் அடுத்து மூன்று மாதங்கட்குக் கொடுக்கத் தவறினாலும், அங்கத்துவ உரிமையை இழந்தவராவார். இப் பிரிவின்கீழ் அங்கத்துவ உரிமையை இழந்தவர், அவ்வுரிமையை இழந்த திகதி தொடக்கம் மூன்று மாதங்கட்குள் கொடுக்கவேண்டிய முழு அங்கத்துவப் பணத்தையுங் கொடுத்தால், மீண்டும் அங்கத்துவம் பெறுவதற்கு உரிமையுடையவராவார். அவரின் அங்கத்துவம் நிர்வாகசபையினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

16. தலைவர் கடமை:

கூட்டங்களைச் சிறந்த முறையில் நடாத்துதல், தர்மகர்த்தாக்கள் சபையின் நிர்வாகப் பொறுப்பாளராக இருத்தல், உத்தியோகத்தரின் கடமைகளை விசேட முறையில் நடைபெற ஊக்குவித்தல், ஆதரவளித்தல், பரிபாலித்தல் முதலியனவாம்.

17. செயலாளரின் கடமை:

(அ) தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டங்கள், நிர்வாகசபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி வரலாறுகளையும், தீர்மானங்களையும் குறிப்புப் புத்தகத்திற் சரிவர எழுதி வைத்துச் சபைகட்குச் சமர்ப்பித்தல்.

(ஆ) தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டங்கள், நிர்வாகசபைக் கூட்டங்களைக் கூட்டுதல், அறிவித்தல் செய்தல்.

(இ) தர்மகர்த்தாக்கள் சபையின், நிர்வாகசபையின் தீர்மானங்கள் யாவையுஞ் செயல்முறையிற் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விதிகட்கு அமைவாக எடுத்தல்.

(ஈ) சபையின் சார்பிற் கடிதப் போக்குவரத்திற்குப் பொறுப்பாளராக இருத்தல்.

(உ) தர்மகர்த்தாக்கள் சபை அங்கத்தவர் இடாப்பு, ஏனைய சபைப் புத்தகங்கள், பத்திரங்கள், தளபாடங்கள் யாவையும் பேணி வைத்தல்.

(ஊ) தர்மகர்த்தாக்கள் சபையின் பொருட்கள் யாவையும் ஒரு புத்தகத்திற் பதிவு செய்து தலைவரிடம் ஒப்புவித்தல்.

18. உதவிச் செயலாளரின் கடமை:

செயலாளரின் கடமைகளில் எவற்றையேனும் உதவிச் செயலாளரின் கடமையெனத் தலைவரால் நியமிக்கப்பட்டவற்றைப் பொறுப்பேற்றுச் செய்தல்.

19. தனாதிகாரியின் கடமை:

(அ) தர்மகர்த்தாக்கள் சபையின் பணம், சொத்து முதலியவைகளை ஏற்றுக் கொண்டு அவைகட்குப் பற்றுச்சீட்டுக் கொடுத்தல்.

(ஆ) நிர்வாகசபையின் ஆஞ்ஞைப்படி செலவு செய்தல். எச் செலவும் தலைவரின் அனுமதியைப் பெற்றுள்ளதாக இருத்தல் வேண்டும்.

(இ) வரவு செலவுக் கணக்குகளை அதற்குரிய புத்தகங்களில் எழுதுதல், வேண்டிய காலங்களிற் சபைக்கு வரவு செலவுத் திட்டங்கள், அறிக்கைகள் வேண்டியபடி தயாரித்துச் சமர்ப்பித்தல்.

(ஈ) கணக்குப் பரிசோதகர் தமது கடமையை ஆற்றுவதற்கு வேண்டிய உதவியளித்தல்.

20. உதவித் தனாதிகாரியின் கடமை:

தனாதிகாரியின் கடமைகளில் எவற்றையேனும் உதவித் தனாதிகாரியின் கடமை எனத் தலைவரால் நியமிக்கப்பட்டவற்றைப் பொறுப்பேற்றுச் செய்தல்.

21. நிதிக் கட்டுப்பாடு :

(அ) நூறு ரூபாவுக்கு மேற்பட்ட எச் செலவையும் நிர்வாகசபையின் அனுமதியின்றிச் செலவு செய்தலாகாது.

(ஆ) ஐம்பது ரூபாவுக்குமேல் தனாதிகாரியின் பொறுப்பில் தர்மகர்த்தாக்கள் சபையின் பணமிருக்கக்கூடாது.

22. வங்கிக் கணக்கு :

தர்மகர்த்தாக்கள் சபையின் பேரில் நிர்வாகசபையால் நியமிக்கப்படும் வங்கியிற் பற்று வரவுக் கணக்கு ஆரம்பிக்கும் உரிமை நிர்வாக சபைக்குள்ளது. வங்கிக் காசோலைகள் கீழ்க் குறிக்கப்படும் உத்தியோகத்தர் இருவரின் கையொப்பத்துடன் வழங்கப்படல் வேண்டும்.

(அ) தலைவர் அல்லது தலைவரில்லாதவிடத்து இதற்கென நிர்வாகசபையால் நியமிக்கப்பட்ட உபதலைவர்.

(ஆ) தனாதிகாரி அல்லது உதவித் தனாதிகாரி இல்லாதவிடத்துக்காரியதரிசி.

23. விதிகள் திருத்தம் :

வருடாந்தக் கூட்டத்திலேனும் அல்லது விதி மாற்றத்திற்கெனக் கூட்டப்படும் விசேட கூட்டத்திலேனும், சமுகமாயிருக்கும் அங்கத்தவர்களில் நாலில் மூன்று பங்கிற்குக் குறையாத அங்கத்தவர்களின் சம்மதத்தோடு விதிகள் திருத்துதல் அல்லது புது விதிகளைக் கூட்டுதல் செய்யலாம்.

24. அர்த்தம் :

(அ) இவ் விதிகளில் ''தர்மகர்த்தாக்கள் சபை'' என்னுஞ் சொல் ''அகில இலங்கை சைவ ஆலய தர்மகர்த்தாக்கள் சபை''யைக் கருதுவதாகும்.

(ஆ) இவ் விதிகளை அர்த்தம் பண்ணுவதிற் சந்தேகம் அல்லது பிணக்கு ஏற்படின், நிர்வாகசபையின் அர்த்தமே முடிவானதாகும்.

---

போஷகர் : சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள்
தலைவர் : சிவஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள்
காரியதரிசிகள் : S. விஸ்வநாதன்
S. யோகேந்திரம்
தனாதிகாரி : K. V. கனகரத்தினம், J. P.
K. சின்னத்தம்பி

குகன் அச்சகம், தெல்லிப்பழை